# MEASLES

## உங்கள் குழந்தை இதனால் பாதிக்கப்படுவதை அனுமதிக்காதீர்கள்

## - அவர்களுக்கு எம்எம்ஆர் தடுப்பூசியை போட்டு பாதுகாப்பளியுங்கள்

- மறுபடியும் தட்டம்மை பாதிப்பு பற்றிய செய்திகள் வருகின்றன வேல்ஸ் மற்றும் இங்கிலாந்தில் கடுமையான பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன மற்றும் தட்டம்மையினால் பாதிக்கப்பட்டுள்ள குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரித்துவருகிறது.
- தட்டம்மை மிகவும் தீவிர நோயாக மாறலாம், காது மற்றும் மார்பு நோய்தொற்றுகள், வலிப்பு, வயிற்றுப்போக்கு மற்றும் மூளை பாதிப்பு ஆகியவற்றுக்கு இட்டுச்செல்லலாம் தட்டம்மையினால் உயிருக்கு ஆபத்து ஏற்படலாம்.
- உங்கள் குழந்தைக்கு எம்எம்ஆர் தடுப்பூசி போடவில்லையெனில் அவர்களுக்கு தட்டம்மை வரும் ஆபத்து உள்ளது.
- சிறந்த பாதுகாப்பிற்கு எம்எம்ஆர் தடுப்பூசி இரண்டு முறை போடுவது அவசியம்.
- உங்கள் குழந்தை எம்எம்ஆர்- தடுப்பூசியை இரண்டு முறை போட்டுக்கொள்ள வேண்டியிருந்து அவர்கள் இன்னும் அதனை பெறவில்லையெனில், குழந்தைகள் எந்த வயதாக இருந்தாலும் சரி, நீங்கள் விரைவில் உங்கள் ஜிபியை தொடர்பு கொண்டு அவர்களுக்கு தடுப்பூசி போட வேண்டும்.*
- உங்கள் குழந்தைக்கு எம்எம்ஆர் தடுப்பூசி இரண்டு முறை போடப்பட்டதா என உங்களுக்கு நினைவு இல்லையெனில் , அவர்களது தனிப்பட்ட குழந்தை உடல்நலன் பதிவை சோதிக்கவும் (சிவப்பு புத்தகம்) இது உதவவில்லையெனில், உங்கள் ஜிபியிடம் பேசவும்
- உங்கள் குழந்தைக்கு எத்தனை முறை தடுப்பூசி போடப்பட்டது என உங்களுக்கு தெரியவில்லையெனில், அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்காமல் இருப்பதைவிட , இப்போது இரண்டு முறை எம்எம்ஆர் தடுப்பூசி போடுவது நல்லது

*உள்ளூர் பாதிப்பின் விளைவாக 18 மாதங்கள் வயதிலிருந்து ஒரு மாத இடைவெளியில் இரண்டு மருந்தளவுகள் வழங்கப்படலாம்

**immunisation**

உங்கள் குழந்தையை பாதுகாக்க மிகப்பாதுகாப்பான வழி

இந்த துண்டுப்பிரசுரத்தின் பின்புறத்தில் தட்டம்மை பற்றிய சில பொதுவான கேள்விகளும் எம்எம்ஆர் தடுப்பூசி பற்றியும் பட்டியலிடப்பட்டுள்ளது

# தட்டம்மை பற்றிய சில பொதுவான கேள்விகள் மற்றும் எம்எம்ஆர் தடுப்பூசி பற்றிய கேள்விகளுக்கான பதில்கள்

## தட்டம்மை பாதிப்பு பற்றிய இந்த செய்திகளை நாம் ஏன் காண்கிறோம்?

தட்டம்மை மிகவும் எளிதாக பரவும் நோய், ஒரு நபரிடமிருந்து மற்றொரு நபருக்கு குறிப்பாக பள்ளிகளில் விரைவாக பரவுகிறது. தட்டம்மை பாதிப்புள்ள குழந்தை அதனுடன் தொடர்பு கொள்ளும் பாதுகாக்கப்படாத (தடுப்பூசி போடாத) பெரும்பாலான அனைத்து குழந்தைகளுக்கும் நோயைப் பரப்புகிறது. 2017ன் இறுதியில் உலகளவில் தட்டம்மை பாதிப்பு அதிகரித்தது அது இங்கிலாந்தையும்(யுகே) பாதித்தது. இதன் விளைவாக பரந்த சமூகத்திற்குள் சில பரவல்கள் ஏற்பட்டுள்ளன, குறிப்பாக தடுப்பூசிபோடும் வயதைவிட குறைந்த வயதுடைய குழுக்களில் எளிதாக பரவியது.

## பொதுவாக எம்எம்ஆர் தடுப்பூசிகள் எப்போது போடப்படுகிறது?

ஒவ்வொரு முறையும் ஒரு தடுப்பூசியுடன், 12 மற்றும் 13 மாத வயதாகும் போது மற்றும் மறுபடியும் மூன்று வயது நான்கு மாதங்கள் நிறைவடையும்போது போடப்படும் ஆனால் உங்கள் குழந்தைக்கு இந்த தடுப்பூசி போடப்படவில்லையெனில், அ வர்களுக்கு எந்த வயதிலும் ஒரு மாத இடைவெளியில் இந்த மருந்தளவுகளின் தடுப்பூசிகளை போடலாம்

## தடுப்பூசியினால் ஏதேனும் குறிப்பிடத்தக்க பாதிப்புகள் அவர்களுக்கு ஏற்படுமா?

தடுப்பூசி போட்ட பிறகு உங்கள் குழந்தைகளுக்கு தட்டம்மை, பொன்னுக்கு வீங்கி மற்றும் ரூபெல்லா(ஜெர்மானிய தட்டம்மை) நோய்களின் அறிகுறிகள் ஆறுவாரங்கள் வரை இருக்கலாம் ஆனால் மிகவும் ஆரம்ப நிலையில் இருக்கலாம். இது தடுப்பூசி வேலை செய்வதை காட்டுகிறது மற்றும் மூன்றுநோய்களை உருவாக்கும் வைரஸ்களால் ஏற்படும் எதிர்கால பாதிப்பை எதிர்கொள்ள  உங்கள் குழந்தைக்கு தேவையான எதிர்ப்புத்திறன் இதன்மூலம் உருவாகியுள்ளது . அனைத்து குழந்தைகளுக்கு இந்த அறிகுறிகள் இருக்கும் என கூற இயலாது ஆனால் அதற்காக தடுப்பூசி வேலை செய்யவில்லை என அர்த்தம் கிடையாது.

## பாதிக்கப்பட்ட பகுதிகளில் இருக்கும் பெற்றோர்கள் தட்டம்மைக்கு எதிராக தடுப்பூசி போட்டுக்கொள்ள வேண்டுமா?

பல நோய்கள் போலவே, ஒருமுறை உங்களுக்கு தட்டம்மை வந்துவிட்டால் மறுபடியும் அது உங்களுக்கு வராது ஏனெனில் அதற்கான இயற்கையான எதிர்ப்புத்திறன் உங்களுக்குள் உருவாக்கப்பட்டிருக்கும். அதனால் நீங்கள் ஏற்கனவே எம்எம்ஆர் தடுப்பூசி இருமுறை போட்டுக்கொண்டிருந்தால் இப்போது தடுப்பூசி போட வேண்டிய அவசியம் இல்லை.

---

தட்டம்மை மற்றும் எம்எம்ஆர் பற்றிய கூடுதல்தகவல்களுக்கு க்கு செல்லவும்
**www.nhs.uk/conditions/measles/**

© Crown copyright 2023. Product code: M23TAM. UKHSA Gateway Number 2023258. 1P 200k August 2023 (APS) – Schools version

This is a Tamil translation of the measles dont let your child catch it – English version. There are also versions in Afrikaans, Arabic, Bengali, Cantonese, simplified Chinese, French, German, Hebrew, Hindi, Italian, Lithuanian, Polish, Portuguese, Romani, Romanian, Spanish, Swahili, Tagalog, Turkish, Ukrainian and Urdu.
If you would like more copies of this leaflet or any other immunisation publications please visit www.healthpublications.gov.uk or call 0300 123 1002

NHS

**நோய்த்தடுப்பாற்றல் பற்றிய தகவல்**